பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 03 | வியாழக்கிழமை | 19.09.2024 | அதிர்வு 048

## தேர்தல் பிரசாரங்கள் நள்ளிரவுடன் ஓய்வு!



ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் நேற்று புதன்கிழமை 06



### தேர்தல் நெருங்கும் வேளை ஜே.வி.பியின் சுயரூபம் வெளியானது

# காணி,பொலிஸ் அதிகாரம் அநுர தரப்பு பகிர மாட்டாது

## அக்கட்சியின் எம்.பி. விஜித ஹேரத் பௌத்த காங்கிரஸுக்கு உறுதியுரை

13 ஆவது திருத்தத்தை தற்போதைய வடிவில் மட்டுமே நடைமுறைப்படுத்துவோம்எனவும்,மாகாணசபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைதேசியமக்கள்சக்தி வழங்காது எனவும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 06

# செப். 21ஆம் திகதி எம் வெற்றி உறுதி!

### இறுதி பிரசாரத்தில் ரணில் முழக்கம்

செப்டெம்பர் 21ஆம் திகதி தனது வெற்றி உறுதியானது என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனைவரையும் ஒன்றிணைத்து வலுவான பொருளாதாரத்துடன் அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார். 06







ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இனி தேர்தல் பிரசாரங்களாக அமையும் செய்திகள், கட்டுரைகள், விவரணங்கள் போன்றவற்றை ஊடகங்கள் வெளியிடக்கூடாது. இது தேர்தலுக்கு முந்திய அமைதிக் காலம்.

நேற்று நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரம் முடிந்து விட்டது. என்றாலும் பத்திரிகைகள் நேற்று நள்ளிரவு வரை நடைபெற்ற கூட்டங்கள் பற்றிய செய்திகளை வெளியிட முடியும்.

நேற்று நடைபெற்ற ஊடகக் கூட்டம் ஒன்றில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்த சில கருத்துக்களை என் பத்தியில் கோடி காட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன். 06

# இலங்கை கடனாளி நாடாக மாறியதற்கு ஜனாதிபதி ரணில் மாத்திரமே காரணம்!

## அநுர குமார திஸநாயக்க குற்றம் சாட்டுகின்றார்




இலங்கை கடனாளி நாடாக மாறியதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே காரணம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற பிரச்சார கூட்டம் ஒன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கை ஓர் ஏழ்மை நாடு என்பதைப் போன்றதொரு விம்பத்தையே உலக நாடுகளிடையே ஆட்சியாளர்கள் தோற்றுவித்துள்ளனர்.

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்பட்ட நாடு, 2 ஆயிரத்து 300 வருட வரலாற்றைக் கொண்டதொரு நாடு. இன்று உலக நாடுகளின் கடனை செலுத்த முடியாத, கடனைப் பெற முடியாத நாடாக மாறியுள்ளது.

இந்தநிலையிலே, நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். சர்வதேசத்திடமிருந்து ஆயிரத்து 550 கோடி அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுள்ளோம்.

இதில் ஆயிரத்து 250 கோடி அமெரிக்க டொலர்களை ரணில் மாத்திரமே கடந்த நன்கு வருடங்களில் பெற்றுக் கொண்டுள்ளார்.

இன்று அவரோ தாம் பொறுப்பேற்றதன் பின்னர்தான் எரிவாயு மற்றும் எரிபொருளை வழங்கியதாகக் கூறுகிறார்.

ஆனால், 2015, 2019 ஆம் ஆண்டுகளில் அவர் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்காவிட்டால் எரிவாயு, எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்காது." – என்றார்.

# நாமல், சஜித் நேர்மையற்ற கூட்டணியை உருவாக்கியுள்ளனர் என்கின்றார் ராஜித!




"ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்காக நாமலுக்கும் சஜித்துக்கும் இடையில் நேர்மையற்ற கூட்டணி ஒன்று உருவாகியுள்ளது."

– இவ்வாறு களுத்துறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு பிளவர் வீதியிலுள்ள அரசியல் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில்தான் போட்டி என்று பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணி குறைந்த வாக்குகளைப் பெற்று தற்போது மூன்றாவது இடத்தில் உள்ளது என்றே கூற வேண்டும்.

கிராமத்தில் ஜே.வி.பி.க்கு அதிக பலம் இல்லை. எனவே, களத்தில் உள்ள யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாம் இடத்தில் இருந்தாலும், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. சமூக வலைதளங்களில் இன்று ஒரு வித்தியாசமான செய்தி பரவி வருகிறது. ஜே.வி.பி. ஒரு குமிழி. அந்த காற்று குமிழி ஊதப்படுகிறது. ஆனால் உள்ளே வெறும் காற்றே உள்ளது. எனவே இது ஒரு மாயை. இந்த மாயை செப்டெம்பர் 22 காலைக்குள் நிஜமாகிவிடும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய போதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாத்து வருவதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர். அப்போது ரணில் ராஜபக்ஷ என்று கூறப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களை பாதுகாத்திருந்தால் இன்று அவர்கள் ஜனாதிபதிக்கு எதிராக செயற்படுவார்களா? ராஜபக்ஷக்கள் சஜித்துடன் கைகோர்த்துள்ளதுடன் கூட்டணியை உருவாக்கியுள்ளர். இதுதான் உண்மை.

ஜனாதிபதி தேர்தலில் சஜித்தை வெற்றியடையச் செய்து, எதிர்க்கட்சித் தலைவராக நாமலை நியமிப்பதே சஜித்துக்கும் நாமலுக்கும் இடையிலான இந்தக் கூட்டணியின் நோக்கமாகும். அதற்கு, ராஜபக்ஷக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என சஜித் உறுதியளித்துள்ளார். சஜித் மற்றவர்களை ஏமாற்றிக்கொண்டு, அவர்கள் ஏமாற்றுகிறார்கள் என்று கூறுகிறார். அண்மையில் மஹிந்த ராஜபக்ஷவுன் நாமல் ராஜபக்ஷவும் சஜித்துடன் கலந்துரையாடியுள்ளனர்.

சஜித் தான் ஜனாதிபதியாக வருவதற்கு உதவிகேட்டும், அதற்காக நாமலை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கு ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார். இது நேர்மையற்ற கூட்டணி. அடுத்த ஐந்தாண்டுகளில் எதிர்க்கட்சித் தலைவராக நாமல் ராஜபக்ஷவை நியமித்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக முன்நிறுத்துவதே அவர்களின் எதிர்பார்ப்பு.

இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ராஜபக்ஷக்கள் செயற்படுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து சஜித்தை ஜனாதிபதியாக்கி அவர்களின் அரசியல் சதிகளை வெற்றிபெறச் செய்வது அவர்களின் தேவையாகும்." – என்றார்.




# தேர்தல் முடிந்த பின்னர் வன்முறை வெடிக்கலாம்

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தகவல்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து, தேர்தலுடன் தொடர்புடைய பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சட்டமீறல்கள் தொடர்பில் தமக்கு 854 இருக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன எனத் தெரிவித்திருக்கும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், இம்முறை தேர்தல் முடிவடைந்ததன் பின்னரும் வன்முறைகள் பதிவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

அது மாத்திரமன்றி தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படும் வரை பொதுமக்கள் அமைதிகாக்க வேண்டும் எனவும், தேர்தல் முடிவுகள் யாதாயினும், அரச அதிகாரத்தை எந்தவொரு தரப்பினரும் முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கக்கூடாது என்றும் அந்நிலையம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் நாளை மறுதினம் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் கண்காணிப்பில் ஈடுபட்ட தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், அதன் அவதானிப்புக்களை நேற்றைய தினம் வெளியிட்டது.

இதுகுறித்து விளக்கமளிக்கும் நோக்கில் நேற்று கொழும்பிலுள்ள ரேணுகா சிட்டி ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம –

“ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து, தொடக்கத்தில் அது அமைதியான தேர்தல் செயன்முறை போன்று தென்பட்ட போதிலும் கடந்த இருவாரகாலத்தில் தேர்தல் முறைகேடுகள், வன்முறைச்சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து நிலைமை மோசமடைந்திருக்கிறது. இதுவொரு ஆரோக்கியமான போக்கு அல்ல.

குறிப்பாக தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதி முதல் கடந்த 17 ஆம் திகதி வரையான காலப்பகுதி வரையில் எமக்கு தேர்தலுடன் தொடர்புடைய பாரதூரமான வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் 125 முறைப்பாடுகளும், சட்டமீறல்கள் தொடர்பில் 729 முறைப்பாடுகளும், மொத்தமாக 854 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இருப்பினும் இவை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் முறையே 30,4459 மற்றும் 4581 ஆகக் காணப்படுகின்றன.

அதேபோன்று தேர்தல் முறைகேடுகள், வன்முறைச் சம்பவங்கள் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் கொழும்பு, களுத்துறை, காலி, அநுராதபுரம், பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிக எண்ணிக்கையான முறைகேடுகள் மற்றும் வன்முறைகள் பதிவாகியிருக்கின்றன. வடமாகாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் குறைவாகப் பதிவாகியிருப்பினும், அதற்குக் காரணம் அம்மாகாண மக்கள் தாமும் இத்தேர்தலில் உள்வாங்கப்பட்டிருப்பதாகக் கருதவில்லை என்பதே அவதானிப்பாக இருக்கின்றது. அதுமாத்திரமன்றி அங்கு சில தரப்பினர் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு பிரசாரம் செய்கின்றனர். இவ்வாறு தேர்தலில் மக்களைப் பங்கேற்க வேண்டாம் எனக் கூறுவது, ஒட்டுமொத்த தேர்தலிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

அடுத்ததாக தேர்தல் முறைகேடுகளில் பிரதானமாக அரச அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக வாகன இறக்குமதித்தடை நீக்கப்படல், புதிதாக இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படல், எதிர்வரும் காலத்தில் நிதிக்கொடுப்பனவுகளை வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்படல் போன்றனவும் அதில் உள்ளடங்குகின்றன. இருப்பினும் இதற்குரிய முன்னேற்பாடுகளோ அல்லது நிதி ஒதுக்கீடுகளோ வரவு – செலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்கமுடியவில்லை. எனவே இவற்றை நாம் தேர்தல் முறைகேடுகளாகவே கருதுகின்றோம்.

அதேவேளை ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் பிரதான தொலைக்காட்சி அலைவரிசைகளின் பிரதான செய்தி வேளையில் ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தின் அளவு மற்றும் வேட்பாளர்களால் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் விளம்பரங்களின் மொத்தப்பெறுமதி என்பனவும் எம்மால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. அதன்படி பெரும்பாலான தொலைக்காட்சி அலைவரிசைகளில் சகல வேட்பாளர்களுக்கும் சமத்துவமான வாய்ப்பு வழங்கப்படாமையை அவதானிக்கமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க இம்முறை தேர்தலின் பின்னரும் வன்முறைகள் ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக முதலாவதாக வாக்கு எண்ணப்பட்டு முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தில் இருக்கும் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டவுடன் அத்தகைய அமைதியின்மை ஏற்படக்கூடும். இருப்பினும் தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படும் வரை பொதுமக்கள் அமைதிகாக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அதேபோன்று தேர்தல் முடிவுகள் யாதாயினும், அரச அதிகாரத்தை எந்தவொரு தரப்பினரும் முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கக்கூடாது.”– என்றார்.

# 22 மாவட்டங்களில் ரணில் முன்னிலையிலிருக்கின்றார்

## அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவிப்பு

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிககூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். 160 தேர்தல் தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கமைய 22 மாவட்டங்களில் அவர் முன்னிலையிலிருக்கின்றார்."

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"160 தேர்தல் தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஒருங்கிணைப்பாளர்களால் 3 நாள்களுக்கொருமுறை கணக்கெடுப்புக்கள் நடத்தப்படும்.

அதற்கமைய இன்று காலை 8.30க்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 22 மாவட்டங்களில் நாம் முன்னிலையிலிருக்கின்றோம். அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிககூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

ஜனாதிபதி முறைமை இல்லாதிருந்திருந்தால் 1980களில் நாட்டின் நிலைமை மிக மோசமடைந்திருக்கும். விடுதலைப் புலிகளின் யுத்தமும் நிறைவடைந்திருக்காது.

2022இல் இடம்பெற்ற காலி முகத்திடல் போராட்டமும் இன்னும் நிறைவடைந்திருக்காது. எனவே மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒரு தலைவருக்கே வாக்குகள் வழங்கப்பட வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவோம் என்றும், அதில் சில திருத்தங்களை மேற்கொள்வோம் என்றும் தற்போது கூறும் சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸாநாயக்கவும் அன்று நாடாளுமன்றத்தில் அதனை எதிர்த்தனர்.

ஆனால் அவர்களது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளாதார நிபுணர்களும், பேராசியர்களும் அதற்கு முரணான கருத்துக்களையே கூறுகின்றனர். அவ்வாறெனில் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் சரியானது.



எனவே ஜனாதிபதி பதவியில் மாற்றம் ஏற்பட்டால் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் சீர்குலையும். 2015இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது நான் கூட்டணியின் செயலாளராக செயற்பட்டேன்.

வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டோம். மைத்திரிபால சிறிசேன அன்னம் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மக்களுக்கு பழக்கமில்லாத சின்னத்தில் போட்டியிட்டாலும் அவர் வெற்றி பெற்றார்.

2015இல் எமது தரப்பு தேர்தலுக்காக செலவிட்டதைப் போன்று எந்த தேர்தலிலும் செலவிடவில்லை. ஆனால் இறுதியில் அன்னம் வெற்றி பெற்றது.

அதே போன்று தான் தற்போது செலவிடும் கட்சியின் நிலைமையும் காணப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து வாக்களிப்பதற்கு இலட்சக் கணக்கானோர் வருவதாகக் கூறினாலும் இதுவரை 100 பேர் கூட வரவில்லை. எனவே இவர்கள் எதிர்பார்ப்பது இடம்பெறாவிட்டால், அவர்கள் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதும் பிரச்சினைக்குரியதாகும்.

குழந்தைகளும் இன்று வாக்கு கோருகின்றனர். எனவே அவர்களுக்கு வாக்களித்து உங்கள் வாக்குகளை வீணடிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்."– என்றார்.

# மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்ல வேண்டி ஏற்படுமாம்

## ரணில் எச்சரிக்கை




நாடு மீண்டும் கடன்படாதிருக்க ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகச் சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடு மீண்டும் கடன்படாதிருக்க ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்தப் போகின்றோமா அல்லது கடன்பட்டு மீண்டும் வீழ்ச்சியடையப் போகின்றோமா?

அநுரகுமார திஸாநாயக்க வரியை இல்லாதொழிப்பதாகக் கூறுகின்றார். அவ்வாறு வரியை நீக்குவதன் மூலம் மீண்டும் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக நாம் எதிர்கொண்ட நிலைமையை அடையப்போகின்றோம்.

இன்னும் இரண்டு வாரங்களில் மேலும் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்வதற்கு நாம் தயாராகி வருகின்றோம்.

இவர்களிடம் எந்தவொரு பலமுமின்றி ஆட்சியை மாத்திரம் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

தற்போதுள்ள வரி முறைமையை நீக்குவதன் மூலம் மீண்டும் புதிதாகப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதே போன்று மீண்டும் வரிசை யுகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்."– என்றார்.

# வாக்கெடுப்பு நிலையங்களுக்கு உள்ளே தடை விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் தடை விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் முக்கிய அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் –

"வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துதல், நிழற்படம் எடுத்தல், காணொளி எடுத்தல், ஆயுதங்களை வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் பயன்படுத்துதல் மற்றும் மதுபானம் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தி வருகை தருதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது."– என்றுள்ளது.




## ரணில் - தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பு அம்பலம்

# கட்சியின் தீர்மானத்தை மீறுபவர்களுக்கு எதிராகக் கட்சி உரிய நடவடிக்கை எடுக்கும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கும் இடையிலான தொடர்பு தற்போது அம்பலமாகியுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரியநேத்திரனுக்குத் தன்னாலும், சாணக்கியனாலும் அச்சுறுத்தல் இருக்கின்றது எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் எழுதியுள்ள கடிதமானது தேர்தல் சட்டங்களை மீறும் ஒரு செயற்பாடு என்றும், அதன் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பதையும் மக்கள் அறிவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதியின் பாதுகாப்புக்கும் இளைப்பாறிய ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்தான் அந்தக் கடிதத்தை எழுதி இருப்பார் என்பதை ஊகிக்க முடியும்.

அதனூடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கும் இடையில் இருக்கும் தொடர்பு இப்போது அம்பலமாகிக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேர்தல் நேரத்தில் அரியநேத்திரனுக்கு ஆதரவு பெருகுகின்றது என்று குறிப்பிட்டு அதனால் நானும் சாணக்கியனும் அச்சுறுத்தலாக இருக்கின்றோம் என்றும் கடிதம் மூலம் அறிவிக்கின்றார்.

வாக்கெடுப்புக்கான காலம் அண்மித்து இருக்கையில்தான் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரியநேத்திரனுக்கு ஆதரவு பெருகுகின்றது என்று கூறுவதற்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது?

இது தேர்தல் சட்டத்தை மீறுகின்ற குற்றமாகும். இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நான் உத்தியோகபூர்வமாக முறைப்பாடொன்றைச் செய்திருக்கின்றேன்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் அவ்விதமானதொரு பிரமையை உருவாக்குவதற்காக செய்யப்பட்ட ஒரு தேர்தல் குற்றச் செயற்பாடே அந்தக் கடிதமாகும்.

அதற்கு எதிரான நடவடிக்கையை நாம் எடுத்துள்ளோம். அதில் தேவையில்லாமல் எங்களுடைய பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது.

அரியநேத்திரனின் பெயர் வருவதற்கு முன்பே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தியலுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

அரியநேத்திரனுக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. இந்த எண்ணக்கரு மிகத் தவறானது. இந்த எண்ணக் கரு தமிழ் மக்களுக்கு ஒரு அபாயமான விடயம். இது தமிழ் மக்களின் அரசியல் தற்கொலைக்கு சமனானது. இதனை நாங்கள் எதிர்க்கின்றோம்.

தேர்தலில் ஒருவரை எதிர்ப்பது சாதாரண விடயம். இது சகஜமான விடயம். அதைக் கடிதத்தில் எழுத வேண்டிய தேவை இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை.

என்னை எல்லோருக்கும் தெரியும். எனக்கும் வன்முறைக்கும் வெகு தூரம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். உண்மையிலே என்னில் வைக்கப்படும் குற்றச்சாட்டே அதுதான். அதாவது நான் வன்முறைக்கு ஆதரவாக இல்லை என்பதுதான் குற்றச்சாட்டாகவே கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

அப்படிக் கூறிவிட்டு அவருக்கு உயிர் ஆபத்து, இவர் என்னை எதிர்க்கின்றார் என்று கூறி ஒரு கேலிக்கூத்தாகச் செயற்படுவது அவர்களுடைய அரசியல் வங்குரோத்துத் தன்மையை வெளிப்படையாகக் கூறி நிற்கின்றது.

இதுற்கு எதிரான சட்ட நடவடிக்கையை எடுப்பேன். இப்படியான ஒரு கடித்தை எழுத வைத்து எந்தவித மக்கள் ஆதரவும் இல்லாத ஒருவருக்கு மக்கள் ஆதரவு இருக்கின்றது என்று புலனாய்வு தகவல் என்று கூறி பெரிய விடயமாகக் கூறி வருகின்றார்.

இதில் இருந்து அவர்கள் யாருடைய முகவர்கள் என்று அம்பலமாகி வருகின்றது. இதனை வெளிப்படுத்தவே இந்தச் சந்திப்பை மேற்கொண்டேன்.

மேலும், இந்தத் தேர்தலில் எமது கட்சி ஒரு முடிவை எடுத்திருக்கின்றது. அதற்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். அவ்வாறு கட்சி முடிவைக் கடந்த தேர்தல் காலங்களில் செயற்பட்ட பலருக்கு எதிராகவும் உரிய நடவடிக்கையைக் கட்சி எடுத்துள்ளது. இப்போதும் கட்சியின் தீர்மானத்தை மீறுபவர்கள் தொடர்பில் கட்சி நடவடிக்கை எடுக்கும்.” – என்றார்.

# 45 தமிழக மீனவர்களுக்கு பத்து கோடி ரூபா அபராதம்

## புத்தளம் நீதிமன்றம் விதிப்பு

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 35 நாட்டுப் படகு மீனவர்கள், 10 விசைப் படகு மீனவர்கள் என 45 தமிழக மீனவர்களுக்கு மொத்தம் பத்துக் கோடி ரூபா அபராதம் விதித்து புத்தளம் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருகே பாம்பன் மீன் பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற அலெக்ஸ், ரஞ்சன், சார்லஸ், ஆசை மார்டின் ஆகியோருக்குச் சொந்தமான நான்கு நாட்டுப் படகுகளை கைப்பற்றிஅதிலிருந்த35மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த ஆகஸ்ட் 8 ஆம் திகதியன்று கைது செய்தனர்.

35 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு புத்தளம் மாவட்டம் வாரியாபொல சிறையில் அடைக்கப் பட்டிருந்தனர்.

மீனவர்களின் காவல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 35 மீனவர்களும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர். வழக்கை விசாரித்த நீதிபதி விமலரத்னா, நீளமான ஒரு நாட்டுப் படகிலிருந்த 12 மீனவர்களுக்கு தலா ரூ. 35 இலட்சம் அபராதமும், மற்ற மூன்று நாட்டுப் படகிலிருந்த 23 மீனவர்களுக்கு தலா ரூ.10 இலட்சம் அபராதமும் விதித்தார். அபராதத்தைக் கட்டத் தவறினால் மூன்று மாதம் சிறைத் தண்டனை விதித்து புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்திலிருந்து அந்தோனி தேன் டெனிலா என்பவருக்குச் சொந்தமான மீன்பிடி விசைப்படகில் கடலுக்குச் சென்ற 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு புத்தளத்தில் உள்ள வாரியாபொல சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 10 விசைப்படகு மீனவர்களுக்கு தலா ரூ. 35 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைக் கட்டத் தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனை விதித்து புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆக, 45 தமிழக மீனவர்களுக்கு ரூ.10 கோடி (இந்திய மதிப்பில் ரூ 2.76 கோடி) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 35 தமிழக நாட்டுப் படகு மீனவர்கள் கொழும்பில் உள்ள மிரிஹான முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 10 விசைப் படகு மீனவர்கள் புத்தளம் வாரியாபொல சிறையில் அடைக்கப்பட்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தலைவர்கள் தமிழ் தேசியம் பற்றிப் பேசுகிறார்கள். தேச விடுதலை, இன விடுதலை, அதற்கான போராட்டங்கள், தியாகங்கள் குறித்து எல்லாம் முழங்குகின்றார்கள். மாவீரர் தினத்தில் தலைவர் பிரபாகரன் போல தோற்றமளித்து விளக்கேற்றினால்தான் தேசியவாதிகள். மற்றெல்லோரும் தேச விரோதிகள் என்கிறார்கள்.

ஆனாலும் அத்தகைய தலைவர்கள் குறித்து மனோ கணேசன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தேடிப் பாருங்கள் என்று தமிழ் மக்களிடம் கூறி இருக்கிறார்.

இரண்டு வருடங்களாகத் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கு காத்திரமாக எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு தமிழ் அரசியல்வாதிகளுக்கு முறையற்ற 'பெர்மிட்' சலுகைகளையும் லஞ்சமும் கொடுத்து ஆள் பிடிப்பவர் யார் என்று தேடிப் பாருங்கள் என்று அவர் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தப் பிரகிருதிகளை அவர்கள் தேடிப் பிடிக்கத் தேவையில்லை. 'பெர்மிட்'லஞ்சம் கொடுத்த கேடி யார்? அவற்றை வாங்கிக் கோடி கோடியாய்ச் சுருட்டிய கேடிகள் யார் யார் என்பவை எல்லாம் தமிழ் மக்களுக்கு அத்துப்படி. நன்கு தெரியும்.

பெர்மிட்டையும் லஞ்சங்களையும் வாங்கிக் குவித்தவர்கள் அந்த சுத்துமாத்தை மூடி மறைப்பதற்காக தேசிய வேடம் அணிகிறார்கள்.

உண்மைகளை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் அதன் பிரதிபலிப்பை நாளை மறுதினம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். நம்பலாம்.

## தேர்தல் பிரச்சாரங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தன.

எனவே, மௌன காலத்தில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, நுவன் போகககே ஆகியோர் தலைநகர் கொழும்பில் நேற்று மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தினர். இதனால் கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

யேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் இறுதி பிரசாரக் கூட்டம் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்கஸ் சந்தியில் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் இறுதி பிரசாரக் கூட்டம் மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தை வீதி டவர் மண்டபத்துக்கு முன்பாக நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் இறுதி பிரசாரக் கூட்டம் மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகேகொட ஆனந்த சமரக்கோன் மைதானத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் இறுதி பிரசாரக் கூட்டம் பிலியந்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோமவீர சந்திர சிறி மைதானத்தில் நடைபெற்றது. .

சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் இறுதி பிரசாரக் கூட்டம் கொட்டாவ பிரதான பஸ் நிலையத்தில் இடப்பெற்றது.

## காணி, பொலிஸ் அதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்கள் மற்றும் பௌத்தம், சிங்கள லாசாரம் மற்றும் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான உறுதி மொழிகள் தொடர்பாக ஆலோசிப்பதற்காக அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஒழுங்கு செய்த கூட்டத்தின்போதே தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

13 ஆவது திருத்தம் தேசிய பிரச்சினை அல்லது மாகாண அபிவிருத்திக்கான தீர்வு அல்ல என்ற கருத்தைத் தாங்கள் கொண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு நாட்டின் ஒற்றையாட்சி, இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்தும் அதேவேளை இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை வழங்கும் என்று கூறுகின்ற அரசமைப்பின் 9 ஆவது சரத்தை எதிர்கால தேசிய மக்கள் சக்தியின் அரசு மாற்றாது எனவும், அதற்காக ஜே.வி.பி. பெரும் பங்காற்றியுள்ளது எனவும், அதைத் தொடர்ந்து பேணும் எனவும் அவர் உறுதியளித்தார்.

## செப்.21ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு 2022ஆம் ஆண்டு அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டுக்காகவே தான் முன்னோக்கி வந்தார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனைவரும் இணைந்து இளைஞர் – யுவதிகளுக்கு வளர்ந்த நாடொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான பொறுப்பை நிச்சயம் நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு, கிராண்ட்பாஸில் நேற்று புதன்கிழமை இரவு நடைபெற்ற "ரணிலால் இயலும்" இறுதிப் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் தொடரில் இறுதிப் பொதுக்கூட்டம் இதுவாகும். இதில் மத்திய கொழும்பைச்சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டை மீண்டும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளாத பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மக்களின் ஆணையைக் கோருகின்றேன்.

நாட்டை வங்குரோத்தில் தள்ளும் சஜித் மற்றும் அநுரவின் கொள்கைகளை இந்நாட்டு மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி தோற்கடிப்பார்கள்.

நாட்டை நேசிக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை வெற்றி கொள்ளும் வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டால் இரு வேளை பட்டினியாக இருக்க நேரிடும். எந்த நாளும் பிச்சையெடுக்க முடியாது. இதனை மாற்றியமைக்க வேண்டும்.

பொய்யான அரசியலால் பயனில்லை. எமது மக்களை வசதி படைத்தவர்களாக மாற்ற வேண்டும். எம்மால் இயலும். நாம் வெல்வது உறுதி." – என்றார்.



# சஜித்தின் இறுதி பிரசாரக் கூட்டம்



ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் இறுதி பிரசாரக் கூட்டம் கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தை வீதி டவர் மண்டபத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்றது.

தொடர்ச்சி▼





# சஜித்தின் இறுதி பிரசாரக் கூட்டம்

தொடர்ச்சி▲





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொலிஸுக்குப் பாராட்டு

இந்தத் தடவை ஜனாதிபதித் தேர்தலில் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் ரொம்பவும் குறைவு. தேர்தல் விதிமுறை மீறல்கள் அதிகம் என்றாலும் தேர்தல் வன்முறைகள் மிகக் குறைவு. இது ஆக்கபூர்வமான ஒரு நிலைமை.

வழமைக்கு மாறாக மும்முனைப் போட்டி. அதுவும் மிக நெருக்கமான போட்டி. ஆயினும் அதனால் ஏற்படக்கூடிய வன்முறைகள் குறைவு. இதுவரை நிலைமை அப்படித்தான் இருந்தது. அப்படியே தொடரும் என நம்புவோம்.

ஆயினும், இது புயலுக்கு முந்திய அசாதாரண அமைதியா என்பதைத் தேர்தல் வாக்களிப்புக்குப் பின்னர் நடைபெறப் போகும் சம்பவங்கள் மற்றும் நிலைமைகள்தாம் தெளிவுபடுத்த வேண்டும்.

மும்முனைப் போட்டி கடுமையாக இருப்பதால், இந்த முறை எந்தத் தரப்பும் தனித்து ஐம்பது வீதத்திற்கு அதிக வாக்குகளைப் பெற முடியாது என்பது தான் பொதுவான கணிப்பீடு.

அத்தகைய சூழலில் முதல் சுற்று வாக்கு முடிவுகள் தெரிந்த நிலையில், முடிவுகள் அறிவிப்பது இடைநிறுத்தப்பட்டு, இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகும்.

இந்த 46 வருட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் நடைபெறும் தற்போதைய ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில்தான் முதல் தடவையாக இரண்டாம் சுற்று வாக்கு எண்ணும் நிலைமை ஏற்படும் போல தோன்றுகின்றது.

நாட்டுக்கு இது முதல் அனுபவம் என்பதால் இந்த வாக்கு எண்ணிக்கை அதிக நேரம் இழுபடவும்கூடும்.

அப்படி முதலாம் சுற்றுக்கும் இரண்டாம் சுற்றுக்குமான வாக்கு எண்ணிக்கைக்கு இடையில் இழுபடக் கூடிய நேரத்தில் நாட்டில் பதற்றமும், குழப்பமும் அதனால் வன்முறைகளும் வெடிக்கக்கூடிய ஆபத்து ஏது நிலைகள் உள்ளன.

தேர்தல் வாக்களிப்புக்கு முந்திய அமைதி நிலைமை பற்றிய ஆக்கபூர்வமான சூழலை, தேர்தலுக்குப் பிந்தியதான போக்கு மாற்றி விடுமோ என்ற அங்கலாய்ப்பும் பலருக்கும் இல்லாமல் இல்லை.

எனினும், தேர்தலுக்கு முந்திய அமைதி நிலைகளை ஒட்டிய விடயங்களை பொலிஸார் கையாண்ட முறைமை பற்றி தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய செவ்வாயன்று சுட்டிக்காட்டிய ஒரு விடயம் கவனிக்கத்தக்கது.

சர்ச்சைக்குரிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கின்றார்.

அவர் இல்லாத காரணத்தினால் இம்முறை தேர்தல் விடயங்களைப் பொலிஸார் அதிக நடுநிலைத் தன்மையுடன் சிறப்பாகக் கையாண்டிருக்கின்றனர் என்று அவர் பொலிஸாருக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்.

"முன்னைய காலங்களை விட இம்முறை தேர்தல் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் சிறப்பாகவும், பக்கச்சார்பின்றியும் செயலாற்றியிருக்கின்றனர். அவர்களை இலகுவாகத் தொடர்பு கொண்டு சிறப்பாக ஊடாட முடிந்தது. நெருங்கிக் காரியமாற்ற இயலுமானது. பொலிஸாரின் நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மை மிக்கவையாக இருந்தன. எங்கள் கூட்டங்களில் தேர்தல் ஆணையம் வகுத்த விதிகளுக்கு மாறான - மீறிய - செயற்போக்கு தென்பட்டால் அவற்றை எங்களுக்கு எடுத்துரைத்து, மிக மரியாதையுடன் அணுகி, முறையாக அவற்றைப் பொலிஸார் கையாண்டனர். அவர்கள் நிலைமையை சீராக, சிறப்பாக ஆற்றினர். எதிர்காலத்திலும் அவர்கள் இப்படிச் சுயாதீனமாக - சுதந்திரமாக- நடுநிலையாக - பணியாற்றுவர் என்று நம்பக்கூடிய நிலைமை உள்ளது." - எனப் புகழாரம் சூட்டினார் கலாநிதி ஹரிணி அமரசூரிய.

நல்லது. இது, தேர்தலின் பின்னர் ஆட்சி அதிகாரம் சிவப்பு அணிப்பக்கம் வந்துவிடலாம் என்ற பயத்தில் - அச்சத்தில் - முன்கூட்டியே பிறந்த நேர்மையான அணுகுமுறைக்கான பாராட்டோ, என்னவோ..?





# மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருள்கள் ஏலம்

பிரதமர் மோடிக்குப் பரிசாக அளிக்கப்பட்ட பொருள்கள் அவ்வப்போது மின்னணு முறையில் ஏலம் விடப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் நிதியின் ஒருபகுதி இராணுவ வீரர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் நலனுக்காக வழங்கப்படுகிறது.

பிரதமர் மோடியின் 74ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 6ஆவது முறை ஏலம் விடும் நிகழ்வு தொடங்கியது.

இந்த முறை அவருக்குப் பரிசாகக் கிடைத்த 600 இற்கும் மேற்பட்ட கலைப் பொருள்கள் ஏலத்தில் இடம் பெற்றுள்ளன.

இந்த ஏலம் அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 275 கோடி இந்திய ரூபா சம்பளம் ஷாருக்கானை ஓரம் கட்டினார் விஜய்!



நடிகர் விஜய் தளபதி 69 படத்திற்காக 275 கோடி இந்திய ரூபாவை சம்பளமாகப் பெற்றுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி அதிக சம்பளம் வாங்கும் இந்திய நடிகர் என்ற குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ள நடிகர் விஜய் ஷாருக்கானின் சாதனையை முறியடித்துள்ளார்.

ஜவான் திரைப்படத்திற்காக ஷாருக்கான் 250 கோடி இந்திய ரூபாவினை சம்பளமாகப் பெற்றுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ள விஜய் முழு நேர அரசியலில் ஈடுபட உள்ளதால், அவரின் தளபதி 69வது படத்திற்கு அதிக எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

எச்.வினோத் இயக்கும் இந்த திரைப்படத்தை கே.வி.என். நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

அதிக பொருள்செலவில் உருவாகும் இந்த திரைப்படத்திற்கு அனிருத் இசையமைக்க உள்ளார்.

# துணை முதல்வர் குறித்து முடிவெடுக்கும் உரிமை முதலமைச்சர் ஸ்டாலினுக்கு மாத்திரமே உண்டு

துணை முதலமைச்சர் குறித்து முடிவெடுக்கும் உரிமை முதலமைச்சர் ஸ்டாலினுக்கு மாத்திரமே உண்டு என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சரான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்..

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“துணை முதலமைச்சர் பதவி குறித்து எந்த முடிவாக இருந்தாலும் முதலமைச்சர்தான் முடிவெடுப்பார்.

என்னை துணை முதல்வராக்க வேண்டும் என தொண்டர்கள் சொல்வது அவர்களின் விருப்பம். தொண்டர்களின் விருப்பத்தை நேற்று தெரிவிக்கும் வகையில் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் பேசியிருந்தார்.

எல்லா அமைச்சர்களுமே முதல்வருக்கு துணையாகதான்

## உதயநிதி ஸ்டாலின் கருத்து



இருக்கிறோம். தமிழ்நாட்டில் பெரியாரை தொடாமல் யாரும் அரசியல் செய்ய முடியாது.” – என்றார்.

# பிரேசிலில் தொலைக்காட்சி நேரடி விவாதத்தில் நாற்காலியால் தாக்கிய ஆளுநர் வேட்பாளர்




பிரேசிலில் ஆளுநர் பதவிக்கான விவாதம் தொலைக்காட்சியில் நேரலை நடைபெற்றுக்கொண்டிருந்த போது வேட்பாளர்களில் ஒருவர் போட்டியாளரை உலோகத்தால் செய்யப்பட்ட நாற்காலியைக் கொண்டு தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

16 வினாடிகளே ஓடும் காணொளியில், வேட்பாளரான பாப்லோ மார்கல் தனது உரையை ஆற்றிக் கொண்டிருந்த போது, ஜோஸ் லூயிஸ் டேடெனா என்பவர் திடீரென நாற்காலியால் தாக்குகிறார்.

இதனைச் சற்றும் எதிர்பாராத பாப்லோ மார்கலுக்கு விலா எலும்பு முறிவு மற்றும் மூச்சு விடுவதில் சிரமத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது மார்பு மற்றும் மணிக்கட்டில் காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை தரப்பு கூறியுள்ளது.

இதனிடையே தொலைக்காட்சியில் விவாதத்தை நடத்திய நடுவர் விவாதத்தை நிறுத்தி விளம்பரங்களை ஒளிபரப்பு செய்தார். பின்னர் பாப்லோ மார்கல் இல்லாமலே விவாதம் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# பேஜர் கருவிகள் வெடித்ததில் பலியானோர் 12 ஆக அதிகரிப்பு







லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்திய பல பேஜர் கருவிகள் வெடித்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 2 சிறுவர்களும் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி பேஜர் கருவிகளில் தலா 20 கிராம் அளவில் உயர் தர வெடி மருந்துகள் நிரப்பப்பட்டிருக்கலாமெனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தச் சம்பவத்திற்கு இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும், அதற்கு இஸ்ரேல் எவ்வித பதிலையும் இன்னும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# லெபனானின் தெற்கு பகுதியில் வாக்கி டாக்கிகள் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு; 3 பேர் பலி








லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்தி வந்த தகவல் பரிமாற்ற கருவிகளான பேஜர் கருவிகள் நேற்றைய தினம் நூற்றுக்கணக்கில் அடுத்தடுத்து வெடித்ததில் 12 பேர் உயிரிழந்த நிலையில் 3000 இற்கும் மேற்பட்டோர் வரை படுயாகம் அடைந்தனர்.

லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள தலைநகர் பெய்ரூட்டில் அல்-ஷஹ்ரா மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் ஹிஸ்புல்லா உறுப்பினர்கள் வைத்திருந்த பேஜர்கள் அடுத்தடுத்து வெடித்தன.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஹிஸ்புல்லா குற்றம் சாட்டியது.

இந்நிலையில், நேற்று லெபனான் தெற்கு பகுதிகளிலும் தலைநகர் பெய்ரூட்டில் பல்வேறு இடங்களில் ஹிஸ்புல்லாவிரின் தகவல் பரிமாற்ற கருவிகளான வாக்கி டாக்கி கருவிகள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.





# அநுரகுமாரவின் இறுதி பிரசாரக் கூட்டம்



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் இறுதி பிரசாரக் கூட்டம் மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகேகொட ஆனந்த சமரக்கோன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.




















# ரணிலின் இறுதி பிரசாரக் கூட்டம்

சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் இறுதி பிரசாரக் கூட்டம் கொழும்பு, கிராண்ட் பாஸில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.













# மக்கள் கோரிய முறை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நுவன் போபகேவை வெற்றிபெறச்செய்ய வேண்டும்

## வசந்த முதலிகே தெரிவிப்பு

“நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் செயற்பாடுகளை தலைகீழாக மாற்றும் முறை மாற்றத்தையே மக்கள் கோரி வந்தனர். அந்த முறை மாற்றத்துக்கு ஏற்புடைய வேலைத்திட்டமே மக்கள் போராட்ட கூட்டணியாக நாங்கள் இந்த தேர்தலில் முன்வைத்திருக்கிறோம். அந்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேவை வெற்றிபெறச்செய்ய வேண்டும்.”

– இவ்வாறு மக்கள் போராட்ட கூட்டணி செயற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

மக்கள் போராட்ட கூட்டணியின் இறுதி தேர்தல் பிரசாக்கூட்டம் நேற்று கிரிபத்கொடை நகரில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் அரசியல் முறை தொடர்பில் மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் பாரிய எதிர்ப்பும் விமர்சனங்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன. என்றாலும் தற்போது தேர்தல் சூடுபிடிப்புக்குள் மக்களின் அந்த எதிர்ப்பை கொள்ளையடிக்க அனைத்து வேட்பாளர்களும் பொய் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர். அந்த வாக்குறுதிகளில் அடங்கி இருப்பது மக்களின் கவலை, கஷ்டங்களை வாக்குகளாக மாற்றும் முயற்சி மாத்திரமாகும். மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க முடியுமான வேலைத்திட்டம் எதுவும் இல்லை.

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக தெரிவித்துக்கொண்டு இந்த நாட்டு ஆட்சியாளர்கள் கடந்த இரண்டு வருடங்களாக என்ன செய்தார்கள் என்பது எங்களுக்கு தெரியும். நாட்டு மக்களுக்கு உரித்தான சொத்துகள், எண்ணெய் குதங்கள், துறைமுகம், விமான நிலையம், நிலங்கள் என அனைத்தையும் விற்பனை செய்கின்ற நடவடிக்கையையே செய்தார்கள்.

அதற்கு அப்பால் சென்று சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொண்டு, அந்த கடன்கள் மூலம் பாரிய கண்கட்டி வித்தை ஒன்று நாட்டில் ஏற்பட்டுள்ளதாக காட்டினார்கள். ஆனால் நாட்டை விற்பனை செய்தும் கடன் பெற்றுக்கொண்டும் ஏற்பட்ட வித்தை ஒன்றும் இல்லை.

நாட்டில் பிள்ளைகளில் நான்கில் ஒன்று மந்த போஷணை குறைப்பாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறது. சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கமைய சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் விட்டு அலகு கணிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், நாட்டின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் பாரிய கடன் சுமையுடன் அத்தியாவசிய தேவைப்பாடுகள் இழக்கப்பட்டுள்ள நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

நாட்டின் மொத்த குடும்பங்களில் 22 வீதமானவர்கள் கடனாளியாகி இருக்கின்றனர். 65.5 வீதமானவர்களின் குடும்பங்களின் மாத வருமானம் குறைவடைந்துள்ளது. மக்களின் உணவு செலவு கடந்த வருடங்களுக்கு நிகராக 91.1வீதத்தால் அதிகரித்துள்ளது. சுகாதாரம் மற்றும் கல்விச் செலவு தாங்கிக்கொள்ள முடியாத நிலைக்கு அதிகரித்துள்ளது. அன்றாட உணவு வேளைக்கு வழியில்லாது நம்பிக்கை இழந்த நிலையிலேயே மக்கள் இருக்கின்றனர். இதுதான் அரசாங்கம் செய்துள்ளதாக தெரிவிக்கும் பாரிய வித்தை.

அதனால் ரணில் விக்கிரமசிங்கவை இந்த தேர்தலில் தோற்கடிக்கவேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் கொள்கையையும் தோற்கடிக்க வேண்டும். ஏனெனில் வேறு ஒரு வேட்பாளர் இந்த கொள்கையுடன் ஜனாதிபதி பதவிக்கு வருவாராக இருந்தால், நாட்டு மக்களின் பிரச்சினை தீரப்போவதில்லை. கடந்த காலங்கள் பூராகவும் நாட்டில் அரசியல் அதிகாரத்தில் இருந்த அனைவரும் ஒரே கொள்கையையே செயற்படுத்தினார்கள். அதுதான் மக்களின் நிவாரணங்களை குறைத்துக்கொண்டு, சர்வதேச நாணய நிதியம். இந்தியா, அமெரிக்காவுக்கு அடிபணிந்த வேலைத்திட்டங்களாகும்.

கடந்த காலங்களில் மக்கள் போராட்டத்தில் முறை மாற்றத்தையே மக்கள் கோரினார்கள். நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் செயற்பாடுகளை தலைகீழாக மாற்றும் முறை மாற்றத்தையே மக்கள் கோரி வந்தனர். அந்த முறை மாற்றத்துக்கு ஏற்புடைய வேலைத்திட்டமே மக்கள் போராட்ட கூட்டணியாக நாங்கள் இந்த தேர்தலில் முன்வைத்திருக்கிறோம். அந்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவே நுவன் போபகே ஜனாதிபதி வேட்பாளராகப் போட டியிடுகிறார். அதனால் மக்களின் எதிர்பார்ப்புக்களை வெற்றிகொள்ள குடை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.”– என்றார்.

# தமிழரசுக் கட்சிக்குள் என்ன நடக்கின்றது?

## மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் சி.வி.கே.

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சி கட்சியாகவே இருக்கின்றது. கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதை மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார் .

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழரசுக் கட்சி கட்டுக்கோப்பான கட்சி. அதை யாரும் மாற்ற முடியாது. தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களை முன்வைப்பார்கள்.

ஆனாலும், கட்சி கூடி ஒரு முடிவை அறிவிக்கும். அதுதான் கட்சியின் முடிவு. இதன் பின்னர் பலரும் பல சந்திப்புக்களைச் செய்வார்கள். அதன் பின்னர் சில முடிவுகளை தனிநபர்கள் எடுக்கும் நிலை உருவாகின்றது. அவ்வாறே இந்தத் தேர்தல் நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்தகைய நிலையில் யாருக்கு யார் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பது? தலைவருக்கு எதிராக எடுப்பதா? உறுப்பினர்களுக்கு எதிராக எடுப்பதா?

கட்சியைப் பொறுத்தவரை கட்சியில் ஒவ்வொருவரையும் பலர் சந்திப்பார்கள், தமக்கு ஆதரவு தருமாறு கேட்பார்கள். கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதை மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்குக் கொள்கை இருக்கின்றது. அது நிலையாக இருக்கும். ஆனால், அதில் உள்ள சுமந்திரனோ அல்லது வேறு யாரோ எவர் மீதும் தவறு இருந்தாலும் அதனை நாங்கள் பேசிக்கொள்ளலாம்.



எனினும், கட்சி நிலையாக இருக்கும். எவருக்கும் கருத்துச் சொல்வதற்குச் சுதந்திரம் இருக்கின்றது. அதற்காகச் சிறீதரன் போன்றோர் ஒன்றைச் சொல்கின்றார் என்றால் அதேபோலவே எல்லோருக்கும் அந்தச் சுதந்திரம் இல்லை.

தற்போது ஜனாதிபதித் தேர்தலே இடம்பெறவுள்ளது. அடுத்து வரும் காலத்தில் பல்வேறு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அந்த நேரத்தில் பலரும் வருவார்கள். அந்த நேரத்தில் இந்த விவகாரங்கள் தொடர்பில் நாம் முடிவுகளை எடுப்போம்.

இப்போது பலரும் பல்வேறு மாறுபட்ட கருத்து நிலைப்பாட்டில் இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

ஆனால், இனி அது கனவாகவே இருக்கும் என்பதே எனது கருத்தாகவுள்ளது. நாடாளுமன்றத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்களா? புதியவர்களுக்கு அனுமதி இல்லையா? புதியவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இவை தொடர்பில் அடிக்கடி ஊடக சந்திப்புக்களை நடத்த வேண்டி வரும்." – என்றார்.

# புலிகளை அழிக்கச் செயறட்ட ஒட்டுக்குழுக்களே தமிழரசையும் அழிக்க பொதுவேட்பாளர் வேடம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டு. அமைப்பாளர் சந்திரகுமார் தெரிவிப்பு

(க.சரவணன்)

தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான தமிழரசுகட்சியே சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து, அவருக்கு வாக்களித்தால் தமிழ் மக்களுக்கு தீர்வு ஒன்று கிடைக்கும் என ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. அந்த நிலையில் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சிதைத்தமை போன்று தமிழரசுக் கட்சியைச் சிதைப்பதற்காக, ஆயுதம் தாங்கி போராடி இராணுவத்துடன் சோந்து தமிழ் மக்களை காட்டிக் கொடுத்த ஒட்டுக்குழுக்கள் எல்லோரும் சேர்ந்த குழுவே இந்த தமிழ் பொது வேட்பாளர். எனவே மக்கள் தமிழரசுக் கட்சி ஆதரிக்கும் சஜித் பிரேமதாஸாவை வெற்றிபெறச் செய்வார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டு. மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்

மட்டக்களப்பு, திருமலை வீதி, தாண்டவன்வெளி பிரதேசத்திலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் மாவட்ட அமைப்பாளர ப.சந்திரகுமாரின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆயுதம் தாங்கிப் போராடி, இராணுவத்துடன் சோந்து தமிழ் மக்களை காட்டிக் கொடுத்த ஒட்டுக்குழுக்கள் எல்லோரும் இந்த தமிழ் பொது வேட்பாளருடன் சேர்ந்திருக்கின்றனர். எனவே ஒட்டுக் குழுக்கள்தான் பொது வேட்பாளர்.

இந்தப் பொது வேட்பாளர் அணியில் யார், யார் இருக்கின்றனர்? நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர். அவ்வாறே மட்டக்களப்பில் ரெலோ கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன். வெளிப்படையாக மக்களிடம் ரணிலுக்கு வாக்களிக்குமாறு தெரிவித்து வருகின்றார். எனவே இவர்கள் அனைவரும் தேர்தலில் ஒரு கைகூலியாக செயற்படுகின்றனர். இங்குள்ள தமிழர்களுக்கு அது நன்கு தெரியும்.

அதேவேளை இந்த மாவட்டத்தில் இரத்தம் சிந்தி காக்கப்பட்ட மண். அந்த மண்ணை கபளீரம் செய்து கொண்டுசென்று வெளிமாவட்டங்களில் விற்பவர்கள் நன்றாக இருந்ததார்கள் எனச் சரித்திரம் இல்லை. அவ்வாறே மாவட்டத்தில் அரச காணிகளில் நிறைய மோசடிகள் இடம்பெற்றுள்ளன. சில அரசியல்கட்சிகள் தங்களுக்கு ஏற்றால் போல வருமானத்தை செய்து சகலதையும் சூறையாடியுள்ளனர்.

எனவே எமது தலைவர் சஜித் ஆட்சிக்கு வந்ததும் இந்த ஊழல் மோசடிக்கு எதிராக ஓர் ஆணைக்குழு அமைத்து, விசாரணை செய்து, ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படும். அதேவேளை எதிர்வரும் காலங்களில் இந்த மோசடி கும்பல்களுக்கு மக்கள் தகுந்த பாடம் படிப்பிப்பார்கள்.

அரசாங்கத்தில் இடம்பெற்றுவரும் லஞ்சம், ஊழல், கொலைகளுக்கு நீதி கிடைக்காமல் மக்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கச் சந்தர்ப்பம் ஜனநாயக முறையில் கிடைத்துள்ளது. அதனை சரியாகப் பயன்படுத்தி, சஜித் பிரேமதாஸவின் ரெலிபோன் சின்னத்துக்கு முன்னால் புள்ளடி இடுங்கள். அப்போது தான் உண்மையான ஜனநாயகம் 22 ஆம் திகதிக்குப் பின்னர் மலரும். – என்றார்.




# 20 லட்சம் மேலதிக வாக்குகளினால் வெற்றி பெறுவோம் என்கிறார் சஜித்!

## நேற்று மொனராகலை கூட்டத்தில் அவர் அறிவிப்பு

புலனாய்வுத் துறை அறிக்கையின் பிரகாரம் 20 லட்சம் மேலதிக வாக்குகளால் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும். காலை வாருகின்ற ரணில் – அநுர ஜோடி கீழ் மட்டத்திலே இருக்கின்றது. புனித தலதா மாளிகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முதன் முதலில் சமர்ப்பித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே நாம் தேர்தல் பணிகளை ஆரம்பித்தோம். தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் புத்தபெருமானின் ஆசீர்வாதங்கள் பாதுகாக்கும் என்பதோடு நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். இந்த வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 68 ஆவது மக்கள் வெற்றி பேரணி செப்டம்பர் 18 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் மொனராகலையில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்முறை என்பது ஐக்கிய மக்கள்

தொடர்ச்சி ▼







# 20 லட்சம் மேலதிக வாக்குகளினால் வெற்றி பெறுவோம் என்கிறார் சஜித்!

தொடர்ச்சி▲

சக்தியின் கொள்கையல்ல. எனவே மாற்றுக் கொள்கையோடு இருக்கின்ற எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த நாட்டை கட்டி எழுப்புகின்ற பயணத்தில் அனைவரையும் பங்காளர்களாக இணைத்துக் கொள்வோம். மத சுதந்திரத்தை கௌரவப் படுத்துவதோடு, பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மதங்களைப் பின்பற்றுவதற்கு எவருக்கும் உரிமை இருப்பதனால், அந்த உரிமையை பாதுகாப்பதோடு, மதசார்பற்ற நாட்டை உருவாக்குவதில்லை என்றும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தாம் அதிகாரத்திற்கு வந்து ஆறு மாதங்களுக்குள் போதைப்பொருள் விநியோகத்தை நிறுத்துவதற்கு தேவையான அதிகபட்ச தீர்மானங்களை எடுத்து, போதைப் பொருள் மாபியாவை நிறைவுக்கு கொண்டு வருவோம்.

மக்கள் விடுதலை முன்னணி, திசைகாட்டி, பொது ஜன முன்னணி, யு.என.பி. ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைவரும் இறுதித் தருணத்தில் உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் தொலைபேசிக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த முறை தேர்தலில் 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் நாம் வெற்றி பெறுவோம்.

எம்மிடம் பொய், திருட்டு, மோசடி என்பன இல்லை. அரசியல் டீல்கள் இல்லை. பாதிக்கப்பட்டிருக்கின்ற 220 இலட்சம் மக்களை மீட்டெடுப்பதற்கான சமூக ஒப்பந்தம் மாத்திரமே காணப்படுகின்றது. இதன் போதும் வரிச் சுமையைக் குறைத்து, முதலீடுகளை அதிகரித்து, ஊழல், மோசடிகளை இல்லாதொழிப்போம். நாட்டை சீரழித்த திருடர்களை சட்டத்தின் முன் நிறுத்தி நாட்டில் இருந்து திருடிச் சென்ற அனைத்து சொத்துக்களையும் வளங்களையும் மீண்டும் நாட்டுக்கு பெற்றுக் கொடுப்போம்.

விவசாயிகளுக்கு 5.000 ரூபாவுக்கு நிவாரண அடிப்படையில் உரத்தை வழங்குவோம். வெல்லஸ்ஸ பகுதியில் இல்லாது போன பாரம்பரியமாக விவசாயம் செய்யப்பட்டு வந்த நிலங்களை மீண்டும் பெற்றுக் கொடுப்போம். வறுமையை ஒழிப்பதற்காக ஐந்து திட்டங்களின் கீழ் மாதம் ஒன்றுக்கு இருபதாயிரம் ரூபா வீதம் 24 மாதங்களுக்கு நிவாரணங்களை வழங்குவோம். நாம் வாக்குறுதியளித்தால் அது வார்த்தைகளோடு மாத்திரம் மட்டுப்படாமல் அதனை நிதர்சனப்படுத்துவோம்.

இந்த அரசாங்கம் கதிர்காம புண்ணிய பூமியில் திறந்து இருக்கின்ற மதுபான சாலையை மூடுவோம். இந்த அரசாங்கம் வெட்கமில்லாமல் மத புண்ணிய பூமிகளிலும் மதுபான சாலைகளை திறக்கின்றது. எனவே ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்யுங்கள். – என எதிர்க்கட்சித் தலைவர் அங்கு வேண்டுகோள் விடுத்தார்.











# உத்திகவின் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சந்தேகநபரின் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்குத் தடை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் காட் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் சில சொத்துக்களைப் பயன்படுத்த கொழும்பு மேல் நீதிமன்றம் தடைவித்துள்ளது.

அதற்கமைய,மேற்படிஉதவிபொலிஸ் அத்தியட்சகருக்கு சொந்தமான 3 கார்கள் மற்றும் 2 காணிகளை நேற்று முதல் 3 மாதங்களுக்குப் பயன்படுத்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லஞ்சத்துக்கு எதிரான விசாரணை ஆணைக்குழுவின் சட்டவிரோத பணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் போதைப்பொருள் வர்த்தகத்தினூடாகச் சட்டவிரோதமாகப் பணம் ஈட்டியமை தொடர்பிலான விசாரணைகளுக்கமைய இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# 4.3 மில்லியன் மாணவர்களுக்கு சீருடைகளை நன்கொடையாக வழங்குகிறது சீன அரசாங்கம்

சீன அரசாங்கம் இலங்கையிலுள்ள 4.3 மில்லியன் மாணவர்களுக்கும்பாடசாலைச்சீருடைகளைநன்கொடையாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படவுள்ள பாடசாலை சீருடைகளின் முதலாவது தொகுதியை எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி பெற்றுக் கொள்ளவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் பாடசாலை சீருடைகளின் இரண்டாவது தொகுதி நவம்பர் 21 ஆம் திகதியும், மூன்றாவது தொகுதி டிசம்பர் 20 ஆம் திகதியும் வழங்கப்படும் என சீன அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்தச் சீருடைகள் விநியோகிக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.



# கொள்ளை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பொலிஸ் உத்தியோகத்தர்களும் விளக்கமறியலில்

கொழும்பு – முகத்துவாரம் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து பணத்தை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் கைதான 4 பொலிஸ் உத்தியோகத்தர்களும் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் நேற்று கொழும்பு – புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து 14 லட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பிலேயே மேற்படி 4 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் மேல் மாகாண வடக்கு புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவரும், விசேட பணியகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களும், புளுமெண்டல் பொலிஸ் நிலையத்தின் உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குகின்றனர்.





# தேசபந்து தென்னக்கோன் தொடர்பிலான இடையீட்டு மனு நீதிமன்றினால் நிராகரிப்பு

தேசபந்து தென்னகோனின் பொலிஸ்துறைக் கடமை மற்றும் அதிகாரங்கள் நடைமுறைப்படுத்துவதை தடுத்து விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த இடையீட்டு மனுவைப் பரிசீலிக்க போதுமா. – நியாயமான – சமர்ப்பணங்கள் முன்வைக்கப்படாதமையால், மணி நிராகரிப்பதாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.

பெல்லன்வில தம்மரத்தன தேரர், அகலகட சிறிசுமன தேரர் மற்றும் கொட்டபிட்டியே ராஹுல தேரர் ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

# மலையக, வட- கிழக்கு, கொழும்புத் தமிழர்களுக்கு தீர்வைத் தரக் கூடிய சஜித்துக்கே வாக்களியுங்கள்!

## நேற்றைய விசேட ஊடக சந்திப்பில் மனோ கணேசன் அழைப்பு

நாடு முழுக்க வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு, தரக்கூடிய நடைமுறை சாத்தியமான தீர்வுகளை, இந்த ஜனாதிபதி தேர்தல் வேளையில் மிக தெளிவாக அறிவித்துள்ள ஒரே வேட்பாளர் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மட்டுமே.

எம்முடன் போட்டியில் இருப்பவர்கள், இரண்டு வருடம் அதிகாரத்தில் இருந்து விட்டு, இனப்பிரச்சினை தீர்வுக்கு காத்திரமாக எதுவும் செய்யாமல், தமிழ் பேசும் அரசியல்வாதிகளுக்கு முறையற்ற “பெர்மிட்“ சலுகைகளையும், லஞ்சமும் கொடுத்து ஆள் பிடிப்பவர் யாரென தேடி பாருங்கள்.

இனவாத சிந்தனையை இந்நாட்டில் ஊட்டி வளர்த்ததில் தமக்குள்ள பங்கை மறந்து விட்டு, இன்று திடீர் என தமிழ் பேசும் மக்கள் மீது பாசம் காட்டும் நபர்கள் யாரென தேடி பாருங்கள்.

எனவே, எங்களை நம்பி தைரியமாக சென்று தொலைபேசி சின்னத்துக்கு வாக்களியுங்கள். - என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் விசேட ஊடக சந்திப்பில் உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.


தமது உரையில் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளவை வருமாறு:-

வரலாற்றில் மிக முக்கியமான கால கட்டமான இன்றைய வேளையில் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அணி திரண்டு சென்று தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிக்க மிக தெளிவான காரணங்கள் இருக்கின்றன. மலையக தமிழ் மக்கள், வட கிழக்கு தமிழ் மக்கள், கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஆகிய அனைவருக்கும் இதை நான் மிகத் தெளிவாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

### மலையகத் தமிழ் மக்கள்

இந்நாட்டில் நாம் எமது இறுதி கட்ட குடியுரிமையை 2003 ஆம் ஆண்டில் தான் பெற்றோம். அதாவது, ஓட்ட பந்தயத்தில் கடந்த 20 வருடங்களாகதான் நாம் ஓடிக் கொண்டு இருக்கிறோம். இந்த ஓட்டத்தின் வேகத்தை அதிகரிக்கத்தான் தமிழ் முற்போக்கு கூட்டணி உருவானது. அதன் அடையாளமாக, இந்த 2024ம் ஆண்டு ஒகஸ்ட் 11 ஆம் திகதி, வெற்றி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் நாம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்து இட்டுள்ளோம். சகோதர ஈழத்தமிழ் வரலாற்றில் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு சமனான, மலையக வரலாற்று ஒப்பந்தமே இந்த த.மு.கூ.- சஜித் ஒப்பந்தம்..!

தோட்டத் தொழில் துறையில் “சிஸ்டம்-சேன்ஜ்” என்ற முறை மாற்றம், விவசாய காணி, தோட்டத்தில் வாழும் அனைவருக்கும் வீட்டு காணி



என்ற எமது காணி உரிமையை இந்த உடன்படிக்கை உறுதி செய்கிறது.

எம்மை எதிர்ப்போர் யார்? சற்று உற்று பாருங்கள். கடந்த ஐம்பது வருடங்களாக ஏறக்குறைய எல்லா அரசாங்கங்களிலும் அங்கம் வகித்து விட்டு, இப்போதும்கூட எதுவும் செய்யாமல், வெறும் வாய் சவடால் மட்டும் அடிக்கும் ஒரு பிற்போக்கு கும்பல். இன்னொன்று, மலையக மக்கள் காணி உரிமை பெறுவதை தடுக்கும் இனவாத சிந்தனையை இந்நாட்டில் ஊட்டி வளர்த்ததில் இவர்களுக்கும் இருந்த பங்கை மறந்து விட்டு, இன்று மலையக மக்கள் மீது திடீர் பாசம் கொண்டுள்ள நபர்கள்.

### வட - கிழக்கு தமிழ் மக்கள்

2009 ஆண்டு போர் முடிவுக்கு பின், “அமெரிக்கா வரும், ஐரோப்பா வரும், ஐ.நா. வரும், சர்வதேசம் வரும், உலகமே உதவிக்கு வரும்“ என்று நாம் 2024 வரை தந்த 15 ஆண்டு கால அவகாசத்தில் எவருமே வரவில்லை. தத்தமது தேச நலன்களை மாத்திரம் கணக்கில் எடுக்கும் உலக ஒழுங்கில் எமது பிரச்சினை பின்னாலே போய் விட்டது.

இன்று அரசியல் யாப்பில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தை அமுல் செய்து, நீண்ட காலமாக நின்று போய் இருக்கும் மாகாணசபை தேர்தல்களை நடத்தி, முதல் கட்டமாக வடக்கு, கிழக்கிலே மாகாண சபைகளை மீள உருவாக்கி, அடுத்த கட்டத்தை நோக்கி நகர, எமக்கு மூச்சு விடும் விதமாக தெளிவான உறுதியை தந்துள்ள வேட்பாளர் யார் எனத் தேடி பாருங்கள்.

இரண்டு வருடம் ஆட்சி அதிகாரத்தில் இருந்து விட்டு, எதுவுமே செய்யாமல், இன்று வந்து வாய் சவடால் அடிக்கும் நபர் யார் என தேடி பாருங்கள்..! தமிழ் அரசியல்வாதிகளுக்கு முறையற்ற “பெர்மிட்“ சலுகைகளையும், லஞ்சமும் கொடுத்து ஆள் பிடிப்பவர் யாரென தேடி பாருங்கள். இனவாத சிந்தனையை இந்நாட்டில் ஊட்டி வளர்த்ததில் தமக்குள்ள பங்கை மறந்து விட்டு, இன்று திடீர் என தமிழ் மக்கள் மீது பாசம் காட்டும் நபர்கள் யாரென தேடி பாருங்கள்.

### கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள்

மேல் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட மக்கள், மலையக, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இங்கே இடம் பெயர்ந்துள்ள மக்கள், எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகள் இரண்டு.

ஒன்று - சொந்த வீடில்லா நிலைமை. சொந்த வீடு இருந்தும் ஒரே வீட்டுக்கு உள்ளே, பல குடும்பகள் ஒடுங்கி வாழ வேண்டிய நிலைமை. சொந்த வீட்டு கனவுடன் வாழ்நாள் முழுக்க வாடகை வீட்டிலேயே வாழும் நிலைமை.

இரண்டாவது - தம் குழந்தைகளின் கல்விக்காகத்தகைமையுள்ள பாடசாலைகளைத் தேடி அலையும் நிலைமை. பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில் நுட்பம் ஆகிய போதனைகளையும், ஆசிரியர்களையும் கொண்டிராத நிலைமை. இதனால் தமது பிள்ளைகளுக்கு தரமான கல்வியை பெற முடியாத நிலைமை.

வீடில்லாத குடும்பங்களுக்கு சொந்த வீடு வழங்கும், தனது தந்தை ரணசிங்க பிரேமதாஸவின் கொள்கையை, சஜித் தன்னுள்ளே இயல்பாகவே கொண்டுள்ளார். எதிர்க்கட்சி தலைவராக இப்போதே, பாடசாலைகளுக்கு உதவிகள் செய்து சஜித் பிரேமதாஸ சாதனை படைத்துள்ளார். வீடு, பாடசாலை தொடர்பாக, தெளிவான உறுதியை தந்துள்ள சஜித் பிரேமதாஸவின் தொலைபேசி சின்னத்துக்கு தைரியமாக சென்று வாக்களியுங்கள்..! - என்று தெரிவித்துள்ளது.



# அரியத்துக்குப் பாதுகாப்பு





ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொது வேட்பாளரின் பாதுகாப்பு தொடர்பாக அண்மையில் பிரதிப் பொலிஸ் மா அதிபரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கைக்கமைய குறித்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் இரண்டு உத்தியோகத்தர்கள் நேற்று முதல் பாதுகாப்பை வழங்கும் பணியை முன்னெடுத்துள்ளனர்.

அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் ஒன்பது உத்தியோகத்தர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அரியநேத்திரன் இரண்டு பேரை மாத்திரம் கோரினார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




# புலமைப்பரிசில் வினாப்பத்திரம் இரத்துச் செய்யப்பட மாட்டாது!

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

சர்ச்சையை ஏற்படுத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாப்பத்திரம் இரத்துச்செய்யப்பட மாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அது தொடர்பில் தொடர்ந்தும் கிடைக்கும் முறைப்பாடுகளை உரிய முறையில் விசாரணை செய்து இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.09.2024




உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தைக் குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்கு சுமையாக தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

மூட்டுக்கள் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று சிறிது பதற்றமாக இருப்பீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது உங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் தரமான நேரத்தை செலவு செய்வீர்கள். உங்கள் துணையை உங்கள் நண்பர் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்கள். இது உங்கள் இருவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு அதிகமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் முழுமையாக இருக்கும்.




இன்று நற்பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள். கடினமான சூழ்நிலையையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களின் தன்னம்பிக்கை மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை சிறப்பாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். நீங்கள் எளிதில் உயர்நிலை அடைவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே அன்பு காணப்படும். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான தருணங்களை ஒன்றாக பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்கள் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்யலாம். நீங்கள் இன்று லாபம் அடையும் நாள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி காண மாட்டீர்கள். புதிய விஷயங்களைக் கற்று வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் உங்கள் முயற்சிகள் வீணாகும். பொறுமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் இனிமையான சூழ்நிலை இருக்காது. நிலுவைப் பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு எழும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளின் நலனுக்காக செலவு செய்ய நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக இன்று அமைதியின்மை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய செயல்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் கவனம் தேவை. பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க உரையாடுவதற்கு முன் யோசித்து செயல்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதல் அளிக்கும்.

சக பணியாளர்களை கையாள்வது கடினமாக உணர்வீர்கள். அவர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வார்கள். நீங்கள் பொறுமையாக நிலைமையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு மேற்கொள்வீர்கள். நீங்கள் அவரிடம் எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்கள் பிரியமானவரின் ஆரோக்கியத்துக்காக திடீர் செலவு ஏற்படும்.




இன்று நற்பலன்'கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




இன்று அதிர்ஷ்டம் அதிக அளவு காணப்படும். நீங்கள் எந்தச் செயலை செய்தாலும் அதனை முழுமையாகச் செய்வீர்கள். உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக வெற்றி காண்பீர்கள்.

புதிய வேலை வாய்ப்புகள் காணப்படும். வெற்றி காண நீங்கள் இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் சுப விஷயங்கள் நடைபெறும். நீங்கள் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நேர்மறை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் வெற்றி காண கடுமையாக போராட வேண்டும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாக இருக்க வேண்டும்.

பண வரவு அதிகமாக காணப்படாது. உங்கள் சேமிப்பு அதிகரிக்கவும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.

கண்களில் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளதால் கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 19.09.2024




இன்று மந்த நிலை காணப்படும். மனக் குழப்பங்கள் காணப்படும். பாதக மான விளைவுகள் ஏற்படாமல் தவிர்க்க கவனமாக செயலாற்ற வேண்டும். இன்றைய சவால்களை சந்திக்க மிகவும் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வதில் ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்வதிலும் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

இன்று சில செலவுகள் நேரலாம். அவை தவிர்க்க முடியாததாக இருக்கும். செலவுகளை கட்டுபடுத்துவது நல்லது.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத் துக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கிக் கொள்ள லாம். புதிய மனிதர்களின் சந்திப்பு மற்றும் தொடர்புக்கு வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் கண்ணோட்டம் விரி வடையும்.

இன்று நீங்கள் பல பணிகளில் மும்மரமாக இருப் பீர்கள். இதனால் பணிகள் அதிகமாக இருக்கும். இந்த நிலைமையை நீங்கள் திறமையாக சமாளிக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணை யுடன் நல்லிணக்கம் பராமரிக்க நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண விஷ யத்தில் இன்று அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்று அபாரமான வாய்ப்பு காணப் படுகின்றது.உங்கள் இலக்குகளை எளிதில் அடைவதற்கான தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்க ளுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் இலக்குகளை குறுகிய நேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல் வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு காணப்படும். ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ள உங்கத தருணம்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதிய தாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப் பீர்கள். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று மனதில் பதற்றம் காணப்படும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம். பிரச்சினைகளை சமாளிக் கலாம். வாக்குவாதங்களை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள் ளுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள கவன முடன் பணியாற்ற வேண்டும். உங்கள் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளும் போது பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பேச வேண்டும். உறவை பாதிக்கும் தேவையில்லாத விஷயங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. அதி கரிக்கும் செலவுகளை தவிர்க்க இயலாது.



